செய்தி வெளியீடு எண்: 499 நாள்: 26.07.2018

**<u>சரக்குகள் மற்றும் சேவை வரி நடைமுறை சிக்கல்கள் தீர்க்க குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சங்கங்களுடன் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 26.07.2018 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டம்</u>**

வருகின்ற ஆகஸ்டு மாதம் 4ம் தேதி நடைபெறவுள்ள ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் ஜி.எஸ்.டி. நடைமுறைப்படுத்தப்பட்டதின் காரணமாக குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் மற்றும் சிரமங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்களுடன் இன்று (26.07.2018) கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் **திரு டி.ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் சென்னை நந்தனத்திலுள்ள ஒருங்கிணைந்த கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் மீன்வளத்துறை அலுவலக கட்டிட வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் **திரு கே.சி. வீரமணி**, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் **திரு பா. பென்ஜமின்** ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், வணிகவரித் துறை கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் முனைவர் T.V. சோமநாதன், இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/ சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., வணிகவரித் துறை முதன்மைச் செயலர் திரு கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலர் திரு தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., மற்றும் தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையர் திரு.த.பொ.இராஜேஷ், இ.ஆ.ப. ஆகியோர்கள் கலந்து கொண்டு கருத்துகள் கேட்டனர்.

இக்கூட்டத்தில் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII), தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனங்கள் சங்கம் (TANSTIA), கோயம்புத்தூர் சிறு தொழில் நிறுவனங்கள் சங்கம் (CODISSIA), அம்பத்தூர் தொழிற்பேட்டை

உற்பத்தியாளர்கள் சங்கம் (AIEMA), கிண்டி தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் (IEMA), தமிழ்நாடு சிறு அரிசி அரவை உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று சரக்குகள் மற்றும் சேவை வரி அமைப்பில் உள்ள நடைமுறை சிக்கல்கள் மற்றும் பல்வேறு பொருள்களுக்கான வரிவிகிதத்தை குறைக்க வேண்டியதற்கான காரணத்தை எடுத்துக் கூறி கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்கள் கூறுகையில், அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாட்டு மக்களின் நலனை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் பெருந்தொழில்களை விட குறுந்தொழில்கள் அதிக பங்களிப்பதால் இந்த அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நலனை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்றும் கூறினார். சரக்குகள் மற்றும் சேவை வரி விகிதங்களை பொருத்தமட்டில் ஜி.எஸ்.டி கவுன்சிலின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இதுவரை 457 பொருள்கள் மற்றும் 9 சேவைத் தொழில்களுக்கு வரி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டினர்.

மேலும் அவர் கூறுகையில் தற்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சங்கங்கள் தெரிவித்துள்ள சரக்குகள் மற்றும் சேவை வரி குறித்த கோரிக்கைகள் அரசு கவனமாக பரிசீலனை செய்து 04.08.2018 அன்று நடைபெற உள்ள ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் எடுத்துக் கூறி கோரிக்கைகள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**